# கிராம உத்தியோகத்தர் புதிய நியமனம் வழங்கல் வைபவம் – 2024

கிராம உத்தியோகத்தர் தரம் IIIற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 02.12.2023 ஆம் திகதி நடைபெற்ற எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் காலாண்டுப் பயிற்சிக்கு தேர்ச்சி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் இவ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

02. காலாண்டு பயிற்சி பாடநெறிக்கான ஆரம்ப வைபவம் கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் 08.05.2024 ஆம் திகதி கொழும்பு 03, கொள்ளுப்பிட்டி, காலி வீதியில் அமைந்துள்ள அலரி மாளிகை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

03. இவ் வைபவத்திற்கு அன்றைய தினம் மு.ப. 7.30 மணியளவில் வருகை தர வேண்டும் என்பதுடன் இதற்கான தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் வருகை கட்டயாமானது. அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உங்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் இவ் அழைப்பு கடிதத்தினை கொண்டுவர வேண்டும். இவ் நிகழ்விற்கு தங்களுடன் வருகை தருவதற்கு வேறு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதனை வலியுறுத்துகின்றேன்.

04. வைபவ மண்டபத்திற்கு உட்பிரவேசிக்கும் போது மற்றும் இருக்கையில் அமரும் போது கீழ் வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தயவாய் அறியத்தருகின்றேன்.

- ❖ வைபவ மண்டபத்திற்கு உட்பிரவேசிக்கும் போது பிரதான நுழைவுவாயில் அருகில் அமைக்கப்பட்டுள்ள தங்களுக்கு உரிய பதிவு செய்யும் பிரிவில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
- ❖ வைபவ மண்டபத்திற்கு உட்பிரவேசிக்கும் போது அலரி மாளிகையின் பேர ஏரி நுழைவாயிலினால் உட்பிரவேசித்தல் வேண்டும் என்பதோடு இருக்கையில் அமரும் போது தங்களுக்கு உரிய இருக்கை இலக்கத்திற்கு அமைய மு.ப. 9.30. ற்கு முன்னர் இருக்கையில் அமர்ந்திடல் வேண்டும்.
- ❖ வைபவ மண்டபத்திற்குள் பிரயாணப் பொதி, பொட்டலம், கையடக்கத் தொலைபேசி, புகைப்படக் கருவி மற்றும் வேறு மின்னணு உபகரணங்களை கொண்டு வருவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- ❖ அன்றைய தினம் கீழ் வரும் உடையில் வருகை தர வேண்டும்.
  - ஆண் - தேசிய உடை/வெள்ளை அல்லது வெளிர் நிற முழுக்கை சட்டை மற்றும் கறுப்பு காற்சட்டை
  - பெண் - வெள்ளை அல்லது வெளிர் நிற புடவை/ஒசரி
- ❖ பதிவு செய்யும் பிரிவில் தரப்படும் இருக்கை இலக்கத்தினை தாங்கள் அணிந்திருத்தல் வேண்டும்.

செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்காக